தேசிய பெறுகை ஆணைக்குழு சுற்றறிக்கை இல:01/2023

தேசிய பெறுகை ஆணைக்குழு
இலக்கம்.44(பீ90),ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை
கொழும்பு - 07
2023-07- 06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரசாங்க கூட்டுத்தாபனங்களின், நியதிச்சட்ட சபைகளின்
மற்றும் அரசுடமை கம்பனிகளின் தலைவர்கள்

**தேசிய பெறுகை ஆணைக்குழுவைத் தாபித்தல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கான இருபத்தோராம் திருத்தத்தின் 156 ஆ(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் 2023-05-04 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தேசிய பெறுகை ஆணைக்குழுவானது தாபிக்கப்பட்டுள்ளது.

02. தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கட்டமைப்பானது பின்வருமாறாகும்:

| | | |
|---|---|---|
| 1. | திருமதி டபிள்யு.சுதர்மா கருணாரத்ன | - தலைவர் |
| 2. | திரு.டபிள்யு.ஜவன் திசேரா | - உறுப்பினர் |
| 3. | திரு.டீ.ஏ.பி.தரணகம | - உறுப்பினர் |
| 4. | திரு.சுமந்திரன் சின்னக்கண்டு | - உறுப்பினர் |
| 5. | திரு.ஏ.ஜீ.புபுது அசங்க குணவன்ச | - உறுப்பினர் |

இந்த ஆணைக்குழுவின் செயலாளராக திரு.டீ.சீ.சிறிபத்தன செயலாற்றுகின்றார்.

03. ஆணைக்குழு அலுவலகம் இலக்கம்.44(பீ 90), ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு - 07 என்னும் இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதோடு, ஆணைக்குழுவின் தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள் பின்வருமாறாகும் :

தொலைபேசி இலக்கம் (பொது) : 011-2665152
தொலைநகல் இலக்கம் (Fax) : 011-2665162

04. ஆணைக்குழுவின் பணிகள் அரசியலமைப்பிற்கான இருபத்தோராம் திருத்தத்தின் 156 இ(1) ஆம்

உறுப்புரையின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, அதற்கிணங்க பெறுகை நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல் அதேபோன்று அனைத்து அரசாங்க நிறுவனங்களினதும் பொருட்கள் மற்றும் சேவைகள், வேலைகள், மதியுரைச் சேவை உட்பட தகவல் முறைமைகளை கொள்வனவு செய்வது சம்பந்தமான நடவடிக்கைமுறைகளையும் வழிகாட்டல்களையும் தயாரித்தல், மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்துகைப் பணிகளும் கையளிக்கப்பட்டுள்ளன. இதற்குரியதாக தேவையான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ளது. அதுவரை, தற்போது நடைமுறையிலுள்ள பின்வரும் வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் உட்பட இவை சார்ந்த மேலதிக சுற்றறிக்கைகள் மற்றும் உரிய ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே அமுலில் இருக்குமென்பதனால், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவாய் அறியத்தருகின்றேன்.

i Procurement Guideline and Manual (Goods and Works) - 2006
ii. Guidelines for Selection and Employment of Consultants - 2007
iii. Consulting Services Manual - 2007
iv. Guidelines for Procurement of Pharmaceuticals & Medical Devices of a Consumable Nature - 2022
v. PPP Guidelines for Private Sector Infrastructure Project - 1998
vi. Guide to Project Management & Contract Management - 2017

05. பொதுத் திறைசேரியின் அரசாங்க நிதித் திணைக்களத்தினால் பெறுகை குழுக்களை மற்றும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிக்கும் செயற்பாடானது தொடர்ந்தும் அதே திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோன்று அரசாங்க பெறுகை சம்பந்தமான மேன்முறையீட்டு வழிமுறையும் தற்போது நடைமுறையிலுள்ளவாறு மேலும் அமுலில் இருக்கும்.

06. இது சம்பந்தமான மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், அதன் பொருட்டு 0112665157 அல்லது 0112665152 என்னும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பணிப்பாளருடன் (கொள்கைகள்) தொடர்புகொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

07. தங்களின் கீழ் செயற்படும் திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும் குறித்த இந்த சுற்றறிக்கை சம்பந்தமாக அறிவிக்கும்படியும் இத்தால் மேலும் அறியத்தருகின்றேன்.

சுதர்மா கருணாரத்ன
தலைவர்
தேசிய பெறுகை ஆணைக்குழு.

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம அமைச்சரின் செயலாளர்
3. அமைச்சரவைச் செயலாளர்
4. செயலாளர், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
5. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. கணக்காய்வாளர் நாயகம்.